# சண்முகநாதன்.

# SANMUKANATHAN.


| பத்திரவிகிதம் | |
|---|---|
| உள்ளூருக்கு வருஷத்துக்கு ரூபா | 1 50 |
| வெளியூருக்கு வருஷத்துக்கு ரூபா | 2-00 |
| தொலைப் பகுதிக்கு | |
| ஒன்றுக்கு | -50 |
| தனிப்பிரதி சதம் | 6 |

மாசமிருமுறை பிரசுரமாகும்.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப்படும்.

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முதன்முறைக்கு— | ரூ. ச. |
| ஒருகலத்துக்கு | 7 50 |
| அரைக்கலத்துக்கு | 4-00 |
| கால்கலத்துக்கு | 2-60 |
| வரி 1-க்கு | 0 8 |
| அடுத்தமுறைக்கு ஷை அரைவாசி | |

மலர் ௪. யாழ்ப்பாணம், இராக்ஷச வருஷம் சித்திரை மீ ௨௨உ (5-5-15.) இதழ் ௧௮


உ

குகமயம்.

சங்கரன்றன் சால்பினுறுஞ் சண்முகநாதன் பெயரோ, டிவ்விதமாம பத்திரமு மெக்காளுக்—தங்களுடன், உன்னரிய நன்னிலைமை யுறவெங்கும் பலவிபிட வன்னவன்றே துணையாம.

---

## இந்தியாவில் பெரிய வேலைச்சாலை

### ஃபிஜோலி புளூட்கார்மோனியம்

ரிஜிஸ்டேட் நம்பர் 116, 3வருஷ

உத்தரவாதம்.

இந்த ஆர்மோனியம் எங்கள் வேலைச்சாலையில் கைதேர்ந்த அனுபவசாலிகளால் எங்கள் மேற்பார்வையில் செய்யப்பட்டது. பொருமையும் தேக்கமரமுமாற் செய்யப்பட்டிருக்கிறது. பற்றச்சாமான்கள் முதற்றரமானவைகளாய்ப் பரிசோதிருந்து அனுப்பிக்கப்பட்டிருக்கிறது. நல்ல தொனியும் இனிமையும் நிறமுமானதென நாங்கள் ..... க்கொள்ளுகிறோம். கற்றுக்கொ.... விலை,

பழகுகிறபுளூற் ரூபா 15.

| | | | |
|---|---|---|---|
| 3 ஒக்றேவ் 1 செற்றிட் | 3 ஸ்றப் | ரூபா | 17-21-25 |
| 3 „ 2 „ | 4 „ | | 26-30-35 |

மடிக்கக்கூடியதும் காலாலும் கையாலும் பாவிக்கக்கூடியதும்.

| | | | |
|---|---|---|---|
| 3 ஒக்றேவ் 1 செற்றிட் | 3 ஸ்றம் | ரூபா | 40-45-50 |
| 3 „ 2 „ | 4 „ | | 60-6570 |

ஆடர் அனுப்பும்போது முற்பணமாக 5 ரூபா அனுப்பவேண்டும். வியாபாரிகளுக்கு விசேஷகழிவு கொடுக்கப்படும்;

S. கெஷிம் அன்கம்பனி,
42 6-ஹரிசன்ரோட்
C, P. கற்குத்தா,

---

## அசாதிரோகங்களுக்குப் பிரதிக்ஷ ஔஷதம்.

இப்போது கொஞ்சக்கால மிருந்து மஹா உத்தமபூமியாகிய காசிக்ஷேத்திரத்திற்கு சமீபம பாகிரதிகங்கை ஓரத்தில் நமது ஜன்மபூமியாகிய கான்பூர் நகரத்தில் நமது புத்திர புத்திரி பந்துஜனங்களுக்கு நன்றுய் கற்றுக்கொடுத்து நல்லஅநுபோகஞ் செய்து லோகத்தில் நம் நாமம் நிலைநாட்ட வேண்டுமென்று ஆவலாகி கான்பூரில் ஆதிஆயுர்வேதஅரோக்சதாகர் வைத்திய சாலை வைத்திருக்கிறேன். அதற்காக நம் மருந்துவகாசரி நம் புத்தகமாவதாசரி வேறு வாசனைத் தைலங்களாவதாசரி ஜரிகைபோம்பட்டுச் சால்வைகளும் பனாரஸ் சீலை முதலிய அனேக வஸ்துகளும் வேண்டியவஸ்துகள் நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் ஓர் பெரிய ஆனந்தம்.

"பரமசிவனின் ஜடாவிலிருக்கும் கங்காதேவி பாகிரதி மெத்தக்கடினமாய் தவஞ்செய்து சிவனிடம் மன்றாடிக்கேட்டார் அப்போது சிவன் ஜடாவிலிருந்து ஒரு சொட்டு கங்காசலம் சிவன் கருணைகூர்ந்து விட்டார் அந்த ஒருசொட்டில் மூன்றுகங்கை உண்டாயினது ஒன்று ஆகாசத்திற்போனது ஒன்று பாதாளலோகத்திற்குப் போனது ஒன்று பாகிரதிமஹாராஜன்பிருத்துலோகத்தில் ஜனங்களுக்கு நன்மைக்காக கொண்டுவந்தார் மஹாராஜ சகரருள்ள ௬0-ஆயிரம் புத்திரர்கள் கபிலமுனிவர் சாபத்தினுல் சாம்பலாகிவிட்டார்கள் அவர்களுக்கு மோட்சங்கொடுக்கவேண்டுமென்றுதான் பாதாளத்திற்கு கங்கைபோனது மிர்த்துலோகத்திலுள்ள கங்கையினுள்ள ஜலம் பவிகளுக்கு ஒருசொட்டு முகத்திற்பட்டால் பாவம் நீங்கி மோட்சமடைவார் அதிகமெழுதவேண்டியதில்லை அதிகம் அறியவிருப்புவோர் புராணங்கள் ராமாயணம் பார்த்துக்கொள்ளலாம் இது அனேக இலங்கைவாசிகளுக்கு அகப்படாததினுல் யான் கருணைகூர்ந்து. யான் கங்கைகரையோரத்தில இருக்கிறதினுல் நம்மிடம் மருந்து எடுக்கும் சகோதரர்களுக்கு மருந்துப்பார்சலோடு சிறிய சீசா ஒன்று இனமாய் அனுப்பப்படும்:

### சாதாவரி லேகியம்.

இந்த மோதகம் உத்திரகண்டத்தில் பத்திரிகாசுஆச்ரமத்தில் ஓர் மஹாமுனிவர் வந்தார் அவர் லோகஜனங்களின்மேல் கருணைகூர்ந்து ஏனெனில் தற்காலம் ஜனங்கள் அதிகமாய் மதுபானம் புசிக்கிறதினுல் அனேகம்பேர் சாராயம் அனேகம்பேர் கஞ்சா அபின் இவ்விதமாய் அனேகவித மதுபானம்சாப்பிட்டு கஷ்டமடைவது தெரிந்து சாஸ்திரத்திலிருந்தபிரகாரம் இந்தலேகியம் நமக்கு உபதேசித்தார் மெத்தசீக்கிரம் தேசநன்மைக்காக வெளிப்படுத்தும்படி உத்தரவுகொடுத்தார் இந்த லேகியம் சாப்பிட்டால் கஞ்சா சாப்பிடவேண்டியதில்லை இந்தலேகியத்தில் அபினும் பார்க்கக்குணமுடையது சாராயம் குடிப்பவர் இந்த லேகியம் சாப்பிட்டால் சாராயத்தினுடைய குணம் கொடுக்கும் அபின் சாப்பிட்டதினுல் என்ன குணமிருக்கிறதோ அந்தக்குணம் இந்தலேகியம் கொடுக்கும் இதற்கு மேல் குணங்கள் இருக்கிறது அதாவது மூலக்கடுப்பு இருமல் வாத சல்வலி இடுப்புவலி வயிற்றுவலி ஸ்திரீகளுக்கு கெற்பவாய்வு போன்ற ரோகம் ௨0—வகை பிரமேகம் நீர்க்கடுப்பு நீரடைப்பு நீர்திகமாய்ப்போதல் ஆண்தன்மையற்றவர்களுக்குச் சக்தியக் கொடுத்து மேற்சொல்லிய வியாதிகளும் நிவர்த்தியாகும்-அசைவாய்வு குரியன்கண்ட பணிபோய் நீங்கிவிடும். மலசலஞ்சுத்தமாகி நல்லபசியையுண்டாக்கி இரத்தவிர்த்தியுண்டாகி 7 வகைத்தாது அதிகப்படும். இந்தலேகியத்தில் அபின்கஞ்சா யாதொன்றுஞ்சேர்க்கப்படவில்லை ஆயினும் ஆலமரம் ஜடாசங்கேசாய் முதலிய இப்படி மருந்துகள் சாப்பிட்டால் சக்தியக்கொடுத்து அபின்கஞ்சா உள்ள குணக்கொடுத்து அதுகள் சாப்பிட விருப்பமில்லாமலும் போகும், மேலுக்கு ஒருகெடுதியும் நேரிடாது, கெட்டுப்போனசக்தி திரும்பக்கொடுக்கும். இது ஆண்பெண் இருவரொரும் பாவிக்கலாம், வியாதியில்லாதவர்கள் இந்தலேகியஞ் சாப்பிட்டால் மலசலசுத்தியாகி பசியெடுப்பட்டுப் போசனம்நலமாய்ச்சாப்பிடலாம். அதினுல் நல்ல இரத்தவிர்த்தியுண்டாகிச் சக்தியதிகப்படுத்தும் எவ்வளவுமாசக்ஷ்பட்டாலும் சரீரத்திற்குவருத்தம் தெரியாது. ராத்திரியுள்ளதிகம் நன்றாய்க்கொடுக்கும் ஒருசந்தேகமுமில்லை. தவைர்களுக்கு ...... என்றெண்ணி நான் அதிசயம்வெக்காமல் உலக நன்மைக்காக மெத்தச்சகாயமாய் வெளிப்படுத்தினேன்- லேகியத்தின் விலை ஒரு குத்தல் ரூபா ௮. கால் குத்தலுக்குக்குறையாமல அனுப்பப்படமாட்டாது. கால் குத்தலிருந்தா...ஞ்சரி அரைகுத்தலிருந்தாலுஞ் சரி. தபால்செலவு பேக்கின்சார்ஜு இனும்.

இனிமேலெடுக்கிறவர்கள் கொழும்புக்கு எழுதவேண்டாம். ஏனெனில் கொழும்பில் நான் வேலைக்காரனை க. ஆறுமுகத்தை வைத்திருந்தேன். அவன் நமக்குமாருய் நடக்கிறதினுல போலிமருந்துகள் விற்பதென்றெண்ணி கொழும்பிலிருந்த வைத்தியசாலையை எடுத்துவிட்டேன். நோய் நம்மிடம் புத்தகமாவதாசரி மருந்தாவதாசரி கீழ்சொல்லிய விலாசத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம.

### கோகசாஸ்திரம்.

இந்தப்புத்தகம் லோகபிரயோஜனத்திற்காக சிலகாலம் இவ் லோகத்தில நமது நாமம் நிலைநாட்டவேண்டுமென்று ஆவலாகி கோகசாஸ்திரம் கைத்தொழில் போதினி மூன்றும் சிலபுத்தகங்கள் தப்பன் பிரசுரிக்கச் சொல்லாதவிஷயங்கள் தேசநன்மைக்காக வெளிப்படுத்தினேன் சூரியன் பிரகாசத்தினுல சலசல ஆம்தமங்களும் சுகமடைவதுபோல் மானுடரெல்ல மெடுத்தவர்களுக்கு இந்தப்புத்தகம் அவசியமே ஏனெனில் வைத்தியசாஸ்திரம் வேதசாஸ்திரம் தர்மசாஸ்திரம் கைத்தொழில்ச்சாஸ்திரம் கொக்கோகத்தின் விஷயங்களும் மேற்சொல்லிய நூல்களின் சாரமெடுத்து செந்தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது இந்தப்புத்தகத்தில் கொக்கோகத்திலுள்ள தர்விஷயங்களும் தர்ப்பார்வைகளும் தர்உருவங்களும் இல்லை ஆனாலும் கொக்கோகத்திலுள்ள விஷயங்கள் ஸ்திரீ புருஷர்களும படிக்கக்கூடிய சிறந்த பாஷையில் அச்சிடப்பட்டது. கற்பத்திலிருந் பிறக்கசாலத்திருந்து மரணகாலபரியந்தம் மானுடர் செய்யும விஷயங்கள் எல்லாம் கூறப்பட்டது இந்தப்புத்தகத்தில் அடங்கிய விஷயம் பத்திரிகையில் சுருக்கிக் கூறுகிறேன

ஸ்திரீபுருஷ பேதபேதமும பொருத்தமும்
காலை மாலை செய்யும் கருமங்கள்
ஸ்திரீ புருஷர்சரீரத்தில் காமதேவன்சுழன்றுவரும் ஸ்தானத்தின் காலங்கள் விபரம்
பஞ்சபூதலக்ஷணம்
சரீரஇலக்ஷணை விதிகள்
சிலஔஷதங்கள் செய்யும்முறை
சாம்பிராணிப்பதங்கம் கெத்தப்போட்பை செய்யும்முறை
நாக்குநேத்திரப்பரீக்ஷை
மூத்திரப்பரீக்ஷை
அனேக பிட்டாய்கள் லாடுசெஞ்ஜர் சர்பத்துக்கள் செய்யும்முறை
சில இங்கிலிஷ்செண்ட் வாசனைத்திரவியங்கள் செய்யும்முறை
திறமானமடிக்கவேலாண் செய்யும் விதம்
வாணவேடிக்கைகள் செய்யும் விதம்
காபின்விஸ்கோத் செய்யும் விதம்

பிரசவித்தஸ்திரீகளுக்கு ஜீரத்திற்கு யொழுங்செய்யும்விதம் இவ்விதமாய் அனேக விஷயங்கள் அடங்கியிருக்கிறது வாங்கிப் பார்த்தீர்களேயானுல் குரு இல்லாமல் விஷயங்கள் கற்றுக்கொள்ளலாம் இப்புத்தகமானதைப்பற்றி சிறிப்பத்திரிகைகள் கூறுகின்றன இப்புத்தகம் ஜிலாவாக கவர்ன்மேண்டிடம் றஜிஸ்டர் செய்யப்பட்டது. ஒருவரும் அச்சிடக்கூடாது. அப்படி அச்சிட்டால் நமது கஷ்டங்களைக் கொடுக்கவேண்டிவரும். இப்புத்தகத்தின் முன்விலை ரூபா மூன்று. தற்போது தேசநன்மைக்காக இரண்டரை ரூபாவுக்கு கொடுக்கப்படும். தபாற்செலவு அணு 4

### கஸ்தூரித் திராவகம்.

இந்தத்திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டுவீதம் ஒருஒவின்ஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை இரவுபடுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட காய்ச்சலினுல் தாக்கமுடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். ௪0 நாள் மருந்துசாப்பிட்டால் வியாதிகள்ருய்ச் சொஸ்தமாகும், தருணவயனைடயவாகட்கு இதமிவும் சேர்த்தியானதிராவகம். இதன்விலை அரை அவுன்சக்கு ரூபா 10. இதற்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவு பிரதியேகம்.

### துறுஜிடங்க தைலம்

இதன்சிறந்தகுணத்தை இக்குவிளிப்பின் மிகப்பெருகுமாதலால எனனிடத்தில் நேரிலாவது கடிதமூலமாயாவது விபரம்அறிந்துகொள்ளவும். ஒரு அவுன்ஸ தைலத்தின் விலை ரூபா ௨. தபாற்செலவுபிரத்தியேகம்.

### வீரியஸ்தம்பனக் குளிகை.

ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒருகுளிகையில்தெரியும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. ௨ குளிகைக்குக்குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை அநுபவிப்பார்கள். ௩௨ குளிகையின்விலை ரூபா ௨. தபாற்செலவு அணு ௪. இதன்குணத்தையும் என்னிடத்தில் கடிதமூலமாயாவது நேரிலாவது விபரமறிந்துகொள்ளவும்.

—கெந்தாதரதைலம்—பக்க வாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன்விலை ஒரு அவுன்சுக்கு ரூபா ரு.

—மகாநாராயண தைலம்—வாய்வுகள் கபவாதிசம் முதலானதுக்கு கைகண்டது. ஒருஅவுன்சுக்கு ரூபா க. மேற்கண்ட மருந்துகளுக்குத் தபாற்செலவு பிரத்தியேகம்.

### காமவிலாசலேகியம் அல்லது சாலாமிஸ்ரி லேகியம்.

இந்தலேகியத்தை யான் அநேகபிரபுக்களுக்குச்செயதுகொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள்மனமகிழ்ந்து வெகுமதிகளுங்கொடுத்திருக்கிறார்கள். இதைநான் விளம்பரத்தில் லோக நன்மைக்காக பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனுல் உண்டாகும் நன்மை சுகம் முதலியவைகளை அடையும்படி பொதுஜனநலத்தைக்கருதியே இப்பொழுதே இந்த லேகியத்தைப்பற்றிய பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரீ குங்குமப்பூ சிலாஜித் கஸ்தூரி ருமாஸ்தகா பிதாரு சாலாமுஸ்லி சப்பேமுஸ்லி பிஸ்தாஸ் சாரப்பருப்பு பாதம்பருப்புசாதாவாரி சீரமுன்னரிவிதைநாகப்பூ வங்கபஸ்பம் அபரகபஸ்பம்பவளபஸ்பம் வெள்ளிபஸ்பம் அயகாந்தசெந்தூரம் சாம்பிராணிப்பதங்கம் இன்னுமனேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது: இதனுல் நீரழிவு வெள்ளை நீர்மாவு சுண்ணாம்பு கரைத்ததுபோல் வெள்ளையாய்ப்போகுதல் நீர்க்கடுப்பு நீரடைப்பு மூலக்கடுப்பு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு இருமல் காசம் பித்தகாமாலை பித்தபாண்டு பீனிசம் கைகால் காந்வலி இடுப்புவலி பக்கவாய்வு சூலவாய்வு இன்னும் அனேகவிதமையான வியாதிகள்தீரும், ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் சூதகவாய்வு பிரசவ அறையில் உண்டாகும் பலநோய்கள் நீங்கு தேக புஷ்டியையும் பலத்தையும் தரும் பாலை விர்த்திசெய்யும்.

சிலர் குறணம் லேகியங்களால் சகலநோயுந்தீர்ந்து ௮0 வயதுள்ள முதியோரை யௌவனர்களாக்குமென்றும் சந்தான மில்லாதஸ்திரீகள் கர்ப்பணியாவார்களென்றும் பலவாறு வீணனகாரியங்களைப் பிதற்றித்திரிகிறார்கள். அவ்விதம்பிதற்றவும் பொய்சொல்லவும் என்மனச்சாட்சி எனக்கு இடங்கொடுக்கிறதில்லை- ஆனுல் கர்ப்பத்தரிப்பதற்குத்தகுந்த அவிஷதம்என்னிடமுண்டு. இஷ்டமுள்ளவர்கள் ஆதியோடந்தமாய் அப்பேர்ப்பட்ட ஸ்திரீகளின் தேகக்குணத்தை தெரிவித்து ஔஷதத்திற்கு வேண்டியபணமுஞ் செலவளிப்பார்களாயில் நான் ஔஷதப்பிரயோகஞ் செய்யக்கூடும். இதைப்புருஷர்கள் பெரிய களாச்சிக்காப்பிரமாணமும் ஸ்திரீகள் சிறியகளாச்சிக்காய்ப்பிரமாணமும் புதிய வியாதிகளுக்கு ௪௧ நாளும் பழையவியாதிகளுக்கு ௬௬—நாளும் அந்தந்தவியாதிகளுக்கு மருந்து எடுக்கப்படும்போது நம்மால் தெரிவிக்கப்படும் மனுபானத்துடன் சாப்பிடவேண்டும் விலை இருத்தலொன்றுக்கு ரூபா ௨0கால் குத்தலுக்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. புருஷர்களுக்கு ௪0 நாளைக்கு ஒரு குத்தல்போதுமானது, ஸ்திரீகட்கு முக்கால் குத்தல் இதுசாப்பிடுவதற்கு வெகு இன்பமும் குணமுமாயிருக்கும் இதில்லாகிரியேதுமடையாது, எடுக்க இஷ்டமுள்ளவர்கள் வியாதியின்விபரத்தைக் கடிதமூலமாய்த் தெரிவித்து அத்துடன் அணுஸ்டாமபும் அனுப்பவேண்டியது- அல்லாவிட்டால் லேகியம் அனுப்பப்படமாட்டாது.

எமதுவிலாசம

ஆதிஆயுர்வேதஅரோக்சதாகர் வைத்தியசாலை,
மகாராஜ கெங்காபிரசாத் பண்டிதர்
சிரிக்கிமுஹால்.
கான்பூர்.

## கடிதங்கள்.

### யாழ்ப்பாணத்தார் செய்த நற்றவப்பயன், ஸ்ரீ இராமநாத தர்மம்.

புண்ணியபூமியாகிய பரதகண்டத்துப் பொன்னகரென்ன விளங்கும் தென்னிலங்கையின் சிரபாலய வடபாலிற் பொலிவதாகிய நமது யாழ்ப்பாணத்திலேயுள்ள சைவசமயிகள் பலர் கிறிஸ்தகுருமாரின் போதனையினாலும், கல்வியறிவின்மையாலும், கிறிஸ்தவ உபதேசத்திற்கு மாறாய் இடித்துரைப்போ ரின்மையாலும் சைவசமயவுணர்வும் கல்வியறிவுங் குறைந்தவர்களாயிருந்தார்கள். அக்காலத்திலே புண்ணியபுருஷோத்தமராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அவதரித்துச் சைவசமய சாஸ்திரங்களையும் பிறவற்றையும் யாவரு முணருமாறு புத்தகரூபமாக்கிப் பலர்க்கு முதவியும் அவற்றைக் கற்பித்தும் பிரசங்கங்கள் செய்தும் செய்வித்தும், ஒழுக்க பழக்கங்களைச் செய்துகாட்டியும் அவர்களைத்திருத்தி நல்வழிப்படுத்தியதோடு சமயவிருத்தி கல்வி விருத்திகளையும் அதிசிரத்தையோடு செய்தார்கள். அக்காலத்தின் யாழ்ப்பாணத்திலே கல்வி விருத்தி சமயவிருத்திகள் மிகப்பொலிந்து மலிந்தன. அவர்கள் தேகவியோகமெய்திய பின்னர் அபரபக்கத்துச் சந்திரன்போலக்குறையலாயின. அவர்களுக்குப் பின்பு யாழ்ப்பாணத்திலே கல்வி சமயங்களை வளர்க்கவென முன்வந்தோர்கள் தக்கவருமிலே அவ்வத்துறைகளிலே தலையிட்டார்களாதலின் அவை தலையெடுக்காவாயின. நாவலரவர்கள் சைவசமயத்தையும் கல்வியையும் பொதுவாகச் சைவர்களுக்குக் கற்பிக்கக் கருதினார்களேனும், இக்காலத்திற் போலப் பெண்பாலார்க்குரிய கல்வியை விசேடித்தார்களில்லை. இக்காலத்துச் சில கற்றறிவினர் பிதற்றுவதுபோலத் தடுத்தார்களுமில்லை. அக்காலத்துக்கு வேண்டிய அவசிய தருமங்களையேசெய்து போந்தார்கள். அவர்கள் காலத்திலேயே கிறிஸ்தபாதிரிமார பெண்பாடசாலை தாபிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் அப்பொழுது கிறிஸ்தபாடசாலைகளிற் சே...

[illegible]

...தமது பெருங்குணபூஷணர் ஆதலின் ஸ்ரீ இராமநாதவர்கள் தாமெடுத்தகருமத்தை எண்ணியபடி நிறைவேற்றுவார்கள் என்பது திண்ணம்.

சர்வவியாபியாகிய கடவுள், ருஷியா ஜெர்மனி, ஸ்காத்லண்ட், ஆபிக்கா, இட்டாலி முதலிய தேசங்களிலும் கோயில்கொண்டு அருள்செய்யாமல், இமயமலையின் தென்பாகமாகிய இந்தியா இலங்கையிலே 1008-சிவாலயங்களிலிடமா யிருந்து அருள்செய்வது பாரதகண்டம் புண்ணியபூமியாதலினால் என்ற சித்தாந்தத்தை ஸ்ரீ இராமநாதவர்கள் இலங்கைமுழுமைக்கும் பிதாவாயிருந்தும், கண்டி காலி முதலிய இடங்களுக்குப் போகாமல் யாழ்ப்பாணத்திலே பாடசாலைகள் தாபித்தல் யாழ்ப்பாணத்தார்செய்த நற்றவப்பயன் என்ற சமாதானத்தோடு ஒட்டி அடங்குதலழகு. இப்பொழுது ஸ்ரீ. இராமநாதனவர்கள் தாபிக்கும் காலேச்சு யாழ்ப்பாணத்தவர்களுக்கு மிக்க வாய்ப்பாயிருக்கும்.

இங்ஙனம்:
பொதுநன்மைவிரும்பி.

---

### வண்ணை நல்லை எல்லைக்குள்ளே சைவாங்கிலகலாசாலை வேண்டியது அவசியம்.

மானேஜரும் பத்திராதிபரும்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவல ரவர்களது வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை மானேசராயிருப்பவர் ஸ்ரீ த. கைலாசபிள்ளை அவர்கள். யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையார்நடத்தும் இந்துசாதன இங்கிலிசுப்பத்திராதிபரும் இந்துகாலேச்சுமானேசருமாயிருப்பவர் ஸ்ரீ. அ. சபாபதியவர்கள் இவர்களுள் ஸ்ரீ. த. கைலாசபிள்ளையவர்கள். 1—4—15-ல்வந்த இந்துசாதன தமிழ்ப்பத்திரிகையிலே, கௌரவ ஸ்ரீ பொ. இராமநாதனவர்கள் யாழ்ப்பாணத்திலே ஆண்பிள்ளைகள் உயர்தர இங்கிலிசு கற்பதற்குரிய பாடசாலை தாபித்தல் அவசி...

[illegible]

...இப்பொழுதும் இதுசெய்திருக்கிறார்கள். ஆனால் தாமேயெழுதித் தாமே படிக்குதுபொழுதுபோக்கியதன்றிப் பயன் யாதுமில்லை. பலர் அவற்றைப் பொருட்படுத்திலரெனினும் சிலர் அவற்றால் மிக அச்சுற்றனர்.

ஸ்ரீ அ. சபாபதியவர்கள், ஸ்ரீ கைலாசபிள்ளையவர்கள் இப்பொழுது இந்துசாதனத்தில் எழுதிய விஷயத்தைக் குருபதேசமாக திறைஞ்சியேத்துவதோடமையாது அவர்களை மெச்சிப் புகழ்ந்து அவ்விஷயத்தை இங்கிலிசில் எடுத்து விளக்கியிருக்கிறார்கள். எனவே ஸ்ரீ கைலாசபிள்ளையவர்களது ஸ்ரீ; அ: சபாபதியவர்களால் வேதவாக்கென அங்கீகரிக்கப்பெற்ற கைலாசவாக்கேயாமென்பது வெளியாயிற்று. அன்னமாவின் ஸ்ரீ த கைலாசபிள்ளையவர்கள் சார்வரி ௵ பங்குனி௴ 20௳ வெளிப்படுத்திய துண்டுப்புத்தகத்தில், "இவர் லோக்கல்போட்டும் மி-தியும் ஒன்றென்று ஒருகாலும் வெவ்வேறு என்று பின்னொருகாலும் தமது வசதிக்கும் சமயத்துக்கும் ஏற்றபடி புரட்டுகிறார். சைவபரிபாலன சபைக்கு இவர்போல்பவரல்லது வேறுயதார்த்தவாதிகள் பத்திரிகைநடத்தஅகப்படார்போலும்.' இப்பத்திராதிபர் சுயவரகக்கரைசைப்படுகிறார். ஏன்? இவர் டிஸ்திரிக்கோட்கொம்மிற்றியிலிருந்து சுயவரகடத்துகிறதாகஇந்துசாதனம்கொள்ளாமல பலவிடத்திலிவருடையபேர் வருகின்றதே. அதுபோதாதோ? தலையாளிக்குள்ளும் இனியொரு புதுகோட்டுவராதோ? இச்சுயவரகம் போதாதோ? புறவின்சல் கோட்டுககொம்மிற்றி, லெஜிஸ்லேட்டிக் கோம்மிற்றி, விறேண்டில்லிட் சொசைற்றி முதலானவைகளில் சுதேசிகளாகசெய்து வெட்டி விழுத்தவிடுதன்வோ? சுதேசிகளில்லாமலிருந்தால் இப்போது நடந்தவேலைகள்யாவும் நடக்குமோ? 'இனி இப் பத்திராதிபர் ...

[illegible]

ர், பத்திரிகை நடத்த யதார்த்தமற்றவர், கத்தோலிக்கபாதுகாவல பத்திராதிபர்க்குத் தோற்றவர் என்பவும், கிறிஸ்தவர் தலைமைக்கீழ் நடக்கும் சபை கிறிஸ்தசபையாமென்றும், கிறிஸ்த அங்கத்தவர் கூடிய இடம் சைவவித்தியாசாலையெனினும் அது முன்னில்லாப்புதுவழக்கென்றும்சொன்னவையெல்லாம் ஸ்ரீ சபாபதியவர்கள்வாக்காதலால் அவை ஸ்ரீ சபாபதியவர்களுக்குமுடன்பாடென்பதும், மெஸ். கெவின்ஸ அவர்கள் சிவசாத்திரநிந்தகராகிய சுத்தக்கிறிஸ்தவர், காலிசு இந்துகாலீசு அன்று, சாதனம் இந்துசாதனமன்று, சபையிலுள்ளோர் கலியாணவிஷயத்திற் கலக்கின்றவர்கள், சபை சைவபரிபாலனசபையன்று, சபைப்பணம் வீணிற்செலவாகின்றது, என்பவும் பிறவும் மேற்போந்த கைலாசவாக்கால் நிச்சயிக்கப்படும், ஆனால் சார்வரி ஸ்ரீ பங்குனியிற்பிறந்த கைலாசவாக்கை நம்பலாமா? ஆநந்த ஸ்ரீ பங்குனியிற் பிறந்த கைலாசவாக்கை நம்பலாமா? என்பது ஒருபெரிய ஆக்ஷேபம். முன்வாக்குக்குமாறாக "ஆறுமுகநாவலரவர்களும் அதன்பின் மிஸ்டர் கெவிஞ்சும் தொடங்கிய...... உண்டாயிற்று......பின்வாக்கு வருகிறது. சிறீ. சபாபதியவர்களைப்பற்றிய முன்வாக்குக்கு எதிராக "இந்தகாலீசை உண்டாக்கினவர்களும் இப்போது நடத்துகின்றவர்களும்—செப்தந்திரை யாழ்ப்பாணத்தவர்கள் ஒருபோதும் மறக்கக்கூடாது" என்கதன் பிள்ளைகளைப் பரசமயப்பிரவேசமும் பரசமயப்பழக்கமுமில்லாமற் காத்துவைத்தவர்கள் இவர்களல்லவா? எனப் பின்வாக்கு இடிக்கின்றது 'சபலசக்கரனைப்படுகிறார். ஊறு முன்வாக்கோடு தக்கயஞ்சிறிதும் விருப்பாத்தக்காரோடு யோசித்து என்ற பின்வாக்கு முட்டுகின்றது. இவ்வாறு நிதானமின்றி நிலைபிற்பிரிந்த மனக்கோலமுடிப் பித்தர்பிசாசர்போல உளறிய இந்த வழுக்கைத் தாறுகெட்டமைகையிலும் மைக்கடல்தரங்கிலும் ஒருசிறிதும் ஞானவைராக்கியமுடையார் கவனிக்கும் புத்தகமென்று பொக்கலையன் பொரிமாவை மெச்சினதுபோல அதனை இங்கிலிசிலுமெழுதிச் சொப்பனங்கண்டு மகிழ்ந்தார்கள். அறிஞர்களே! இவ்விருவரிற்புரட்டர்யார்? கிறிஸ்தவழுக்க பழக்க கலப்புள்ளவர்யார்? சபைப்பெயர் யார்? யதார்த்தமற்றவர் யார்? இவர்கள் சபையிலிருந்து செய்த நன்மையென்ன? சிந்தியுங்கள்.

ஸ்ரீ கைலாசபிள்ளை யவர்கள் தம்மை ஸ்ரீ கார்த்திகேயபிள்ளை 'வீணர்' என்று எழுதிவிட்டாரென்று யார் வீணர் எனச் சண்டையிட்டாரே. வீணர் யாவரென இப்பொழுதாவது விளங்காதா?

ஆனால் இந்தக் கைலாசவாக்காகிய உளறுமடையில் ஒன்றேயொன்று வாய்த்திருக்கிறது அதுயாதென்றால், இந்துகாலீசு சைவப்பள்ளிக்கூடமன்றென்று தாபித்த முன்வாக்குக்கு இசையும்படி இந்துசாதனத்திலே தோன்றிய பின்வாக்கில் சுளிபுரம் மானிப்பாய் என்னுமிடங்களிலுள்ளனவே சைவகாலீசுகளாமென்றும், இந்துகாலீசு உண்மையிற் சைவப்பள்ளிக்கூடமாகாது பெயர்மாத்திரையானே இந்துகாலீசு எனப்படுவதாமென்றும் யாவரும் நன்குணருமாறு, இப்போது இந்துகாலீச்சென்னும் பெயரோடு நடக்கும் பள்ளிக்கூடமுண்டாயிற்று. அதனையின் சுளிபுரம் மானிப்பாய் என்னுமிடங்களில் சைவகாலீசுகளுண்டாயின' என்ற வசனம் வந்து துலங்குகின்றது.

ஆகவே ஒரு கையின் விரலை மடித்து எண்ணுவதற்கும்பற்றாத இரண்டொரு சுயநயகருதிய புரட்டராய்வினரையொழிந்த மற்றை யாழ்ப்பாணத்தவர் யாவர்களும் வண்ணைக்கல்லூரியெல்லாருளே சைவஇங்கிலிஷ உயர்தரகலாசாலையொன்று அவசியம்வேண்டியதாயிற்று. மூன்று மிஷன்பாதிரிமார் கூடித் தாபிதக மூவன்றும் இயலாதிருக்கும் இன்றை, ஒரேயொரு இந்தக்காலீச்சைச் செவ்வையாக நடாத்தத்திறனற்ற யாழ்ப்பாணத்தவர்கள் ஒப்பேற்றுதல் ஒருபோதும் இல்லை. அது மலடி மகப்பெற்றமையாகும். பிரபுதிலகராகிய ஸ்ரீ. வி. காசிப்பிள்ளையவர்கள் தேவாலயம் வித்தியாலயம்முதலிய தருமவிஷயங்களிலே ஏதாதனைகளால் பொருள் செலவிட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். பின்னர் இதனைத் துணிந்துசெயக்கூடியவர்கள் மகௌதாரிய மகாப்பிரபுவாகிய கௌரவ ஸ்ரீ பொ. இராமநாததுரையவர்களே. யாழ்ப்பாணத்திலுள்ள சைவ இங்கிலிசுப் பாடசாலைத் தலைவர்களும் பிறரும் ஸ்ரீ இராமநாதனவர்களிடத்திலே இதனை முறையிட்டார்கள். ஸ்ரீ இராமநாதனவர்கள் அதற்கிசைந்து முன்வந்திருக்கிறார்கள். இந்தச் செல்வரிப்பெல்லாம் அவ்வயிரத்தூணைப் பழுதபடுத்தமாட்டா. ஸ்ரீ இராமநாதனவர்களை யதிட்டித்தன்று யாழ்ப்பாணப்பட்டணத்திலே பெரு சைவ இங்கிலிசு உயர்தரகலாசாலை தாபித்துத் தருமபொருட்டு எல்லாம்வல்ல இறைவனைப்பணிவோமாக.

இங்ஙனம்
நா. வடிவேலன்

---

## போலிவாத நிராகரணம்.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த, கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந், தோளுங்கடம்பு மெனக்குமுன்னேவந்து தோன்றிடினே.

[இதன்மேற்பிரசரிக்கப்படும் இக்கடிதம், ஸ்ரீமான் சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயரவர்களது இரண்டாங்கடிதத்துக்குமறுப்பாக, இந்துசாதனபத்திரிகைக்கு என்னாலனுப்பப்பட்டுள்ளது. அப்பத்திரிகைகாரர் தமக்குரிய நடுநிலைமையின்றி, இதனை வெளிப்படுத்தாது இரகசியத்துவைத்துக்கொண்டு, தமது நண்பராகிய உபாத்தியாயரவர்களாலாகாதுஞ் சம்பந்தமில்லாது, பின்னரும் எழுதியிரப்பப்பெற்ற புராணச் செய்யுட்களையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களது வசனங்களையுமே பிரசரித்துவிட்டார்கள். பின்னர், தக்கவர்கள் சிலர் குறைகூறியமையின், எனது கடிதத்தையும் ஒருவாறு வெளிப்படுத்தமாறுடம்பட்டுத், தாமும் உபாத்தியாயரவர்கள் கட்சியைச் சேர்ந்தவராதலின், அவர்களது தோல்வியையும் இலக்கணவழுக்களையும் வெளிப்படையிற் காட்டுவனவாகிய பகுதிகளை இடையிடையே நீக்கி, எனது விஷயத்தைச் சிதைவுறப் பிரசுரித்துவிட்டனர். அதனுண்மையை அறிஞர்கள் கண்டு மதிக்குமாறு, இதனை இப்பத்திரிகைவாயிலாக வெளிப்படுத்துமாறு துணிந்தனன். இந்துசாதன பத்திரிகைகாரரால் ஒதுக்கிவிடப்பட்ட விஷயங்கள் இவைகளேயாமென இலகுவிற் புலனாகுமாறு அவற்றினூடு, ( ) இவ்வடையாளமிடப்பட்டிருக்கின்றது.]

கருவினுணர்ச்சியினுஞ் சித்தாந்த நூலுணர்ச்சியினுஞ் சிறந்துவிளங்காநின்ற அறிஞர்களே!

சைவப்பிரகாச வித்தியாசாலையிலே நான் செய்த பிரசங்கத்திலே சுப்பிரமணியக்கடவுளே திருஞானசம்பந்தமூர்த்திநாயனாராகவந்து பிறந்தாரென்று சிலர் கூறுகின்றார்கள்; அது தவறு என்று பிரமாணசகிதமாகச் சாதித்துப் பிரசங்கித்து நிறுத்திமுடித்தேன்; அப்போது ஸ்ரீமான் சிவ. இ. மாரிமுத்துஉபாத்தியாயரவர்கள்மாத்திரமெழுந்து, அறியாவிறுவெனவினவுமுகத்தானே அதனை மறுக்கத் துணிந்தார்கள், அதனைக் கேட்டிருந்த நானெழுந்து, அதற்குச் சுருக்கமுறவிடையிறுத்தனன். அவர்கள், அதனோடமையாது பின்னரும் இந்துசாதனப்பத்திரவாயிலாக என்னைநோக்கி வினவினார்கள். அதற்கு நான் மேற்படி பத்திரிகைவாயிலாகத்தானே சித்தாந்தசாத்திரம், திருவாசகம் முதலிய மேலாற் பிரமாண சகிதமாக, நீங்களெல்லாம் மகிழ்ந்தங்கீகரிக்குமாறு தக்க சமாதானங்கூறி எனது கோட்பாட்டைச் சாதித்து நிறுத்தினேன். அதனைக்கண்ட உபாத்தியாயரவர்கள், அதனோடமையாது (அபிமானக் காரணமாகப்) பின்னரும் மேற்படி பத்திரிகைவாயிலாக நியாயவரம்பு கடந்து, தமதகத்தெழுந்த) விண்விஷயங்களினாலே பத்திரிகையைநிரப்பியிருக்கின்றார்கள். அவைகளெல்லாம் முன்னே நான் கூறியவாறு சித்தாந்தனபென்றொதுக்கிவிடத் தக்கனவேயாயினும், (அவர்கள் குழுவினராகிய மந்தமதியினர்பொருட்டு) அவைகளுக்குமொருமறுப்பெழுதி வெளியிடல்வேண்டுமென்று எனது நண்பர்கள் சிலர் வேண்டிக்கொண்டமையின், அவர்கள்பொருட்டாகப், பெத்தமுத்தியிரண்டினும் அத்துவிதமாக நின்று உபகரித்து வருங் கருணைநிதியாகிய சுப்பிரமணியப்பெருமானது திருவடிக் கமலங்களை வழுத்திப், பின்னரும் இதனையெழுதலாயினேன்.

(நியாயவரம்பு, இலக்கணவரம்பு, சித்தாந்தவரம்பு முதலிய வரம்புகளைக் கடவாது, உலகமலையாதவாறு உய்த்துணர்வைத்துக், கல்வியறிவில்லா இழிஞராற் பிரயோகிக்கப்படுங் கிராமியமுறையை நாடாது, கல்வியறிவாற்சிறந்த அறிஞர்களாற் பிரயோகிக்கப்படும் நாகரிகமுறையில் அநுந்துணையாவது பிறழாதவாறு எழுதி வெளிப்படுத்திய எனது கடிதத்தைக் கண்ட உபாத்தியாயரவர்கள், அறிஞர்களோடு பேசவேண்டிய முறைபிறழ்ந்து பிதைபடக் கூறல், மற்றொன்றுவிரித்தல், வெற்றெனத்தொடுத்தல், நின்றுபயனின்மை முதலிய குற்றங்கணிறைந்து, 'தாமென்றுந்தொண்டு மேற்கோளைச் சாதிக்கமாட்டாமல் அதற்குச் சேவையைப் பேசுதல், மேற்கோளுக்கு மறுதலைப்படப்பேசுதல், மேற்கோளை விட்டுவிலகுதல், தான் கூறிய ஏதுவுக்குக் குற்றம்வருமிடத்து வேறொரேதுவை எடுத்துக்கூறுதல், தனக்கு வருந் தோல்வியைப் பிறிதொன்றுபேசிமறைத்தல், பயனுடையதன போசுதல், அவாய்நிலை கருதி அன்மையிலவைப்பேசுதல், ஒன்றற்கொன்று பகைகூறுதல், பிறன் கூறிய பொருளை அநுவதிக்கமாட்டாமை, பிறன் கூறிய பொருளை அறிந்தும் அறியான்போன்று வினவுதல், வாதத்தைவிட்டுப் பிறிதொன்றினைச்சொல்லிப் பொழுதுபோக்கல், எதிர்ப்பக்கத்தார்க்குச் சொல்லிய குற்றத்தைப் பரிகரியாதுடம்பட்டுப் பரபக்கத்துக்குக் குற்றங்கூறுதல், தோல்வித்தானமெய்தாதானை எய்தினவென்று கூறுதல், தன் சித்தாந்தத்திற்கிணங்காதனவற்றைச் சொல்லிச் சித்தாந்தஞ்சாதித்தல்' முதலிய தோல்வித்தானங்களெய்தித் துளங்கித் தூஷணமாரிபெய்யத்தொடங்கிக்கொண்டார்கள், 'கெய்யுண்பூங்குழன்மடவாய்! நின்னொடும்யாது-செய்யும்பூசனுக்கெதிராற் றீயவாய்திறந்து—தையும்பூசலுக்கெதிரேன்' என்றவாறு நியாயவாதம்பேசுதலொன்றற்கே நான் எதிராளியன்றித், தீய வாய்திறந்தவையும்பூசலாகிய தூஷணமாரிக்கு நான் எதிராளியல்லேன் ஆதலின், அதனை அவர்கட்கே விட்டு, அதற்கென்னை இலக்காகவைத்துக்கொள்ளாது, தம்மைநோக்கித்தாமே பிறரையே அதற்கிலக்காகவைத்துக்கொள்ளுமாறு உபாத்தியாயரவர்களை அன்போடுவேண்டுகின்றேன். தம்மகத்தெழுந்தவாறே எழுந்திரப்பிய விண்விஷயங்களையொழித்து, இலக்கணநூற்பயிற்சியுஞ் சித்தாந்தநூற்பயிற்சியுமில்லாத மந்தமதியினரை மயக்குதற்கேதுவாயுள்ள போலிவாதங்களை மாத்திரம் எடுத்து இங்கே நிராகரித்து, எனது சித்தாந்தத்தை நிறுத்துமாறு துணிந்தனன். 'தண்கண்டளாருஞ் குலத்துப்பிறந்தார்கருமோ' என்னும் ஆன்றோர்வாக்குக்கிலக்காகவுள்ளவர்கள் நீங்களேயாமாதலிற், சமைசெய்து சீர்தூக்குங் கோல்போலமைந்தொருபாற் கோடாத நிலைமையுடைய அறிஞர்களாகிய நீங்களே, எம்மிருவருள், எவர்கூறியன சித்தாந்தநெறிக்குடன்பாடாவுள்ளன, எவர் கூறியன சித்தாந்தநெறிக்கு மறுதலையாவுள்ளன என்பதனை மனச்சான்று பிறழாதவாறு நிறுத்துக்கூறக்கடவீர்கள்.)

உபாத்தியாயரவர்கள், தமது கடிதத்து முதலிலேதானே, 'சுப்பிரமணியபாத்துவ விறைவுக்கிருக்குமிறை' என்னும் எனது முகவுரையை (யாவது விளங்கிக்கொள்ளும் இலக்கணநூலறிவின்மைகாரணமாக) அதனை விபரீதமாக விளங்கிக்கொண்டு, 'சுப்பிரமணியபாத்துவத்தைப்பற்றித் தங்களிடத்தேயார்வினாவிடையிறுக்குமாறு வினவியது' என்று என்னைநோக்கி வினவுகின்றார்கள். சுப்பிரமணிய பாத்துவ விஷயத்தின்மீதெழுந்த வினா என்பதே அதன்பொருள் எனச், செவ்வனே விளங்கிக்கொள்ளும் ஆற்றலும்மறிவுமில்லாதார்) அவ்விஷயத்துக்குக் கண்டனமெழுதலாற்றுணிதல் வெகுநூதனமேயாம். (அறியாவினுவினவுவான்புகுந்தவொருவருக்கு இந்த விதண்டாவாதங்களெல்லாமெதற்கு? இதனாலே அவர்களது உள்ளக்கிடக்கை வேறு என்பது, மந்தமதியினர்தாமும் விளங்கிக்கொள்ளத்தக்கதாய் வெளிப்படையாகக் கிடக்கின்றதே. சபையின்கணிருந்த அறிஞர்களெல்லாம்மகிழ்ந்து பாராட்டுமாறு செய்த எனது பிரசங்கத்தின்மீதெழுந்த அழுக்காறொன்றேகாரணமாக, உபாத்தியாயரவர்கள் அவ்வினாவை வினவி, அதனை மறைக்க வழிதெரியாது என்னோடு வீண் விதண்டாவாதம்புரிதல்வாயிலாகத், தம்முள்ளக்கிடக்கையாகிய அவ்வழுக்காற்றைப் பகிரங்கத்து வெளித்திறந்துவிட்டார்களே. அழுக்காறே காரணமாகத் தமொருவர்மாத்திரமே எனது பிரசங்கத்தைப் பாராட்டாதொழிக்கமைகொண்டு, சபையின்கணிருந்த அறிஞர்களெல்லாம் அவ்வழுக்கைத் துணிதல் அவர்களது அறிவின் விசேடமேபோலுமாம்.)

ஞானமொன்றேமுத்திக்கு நேரேசாதனமாமென்றும், அதனைமாறுபடாது விளக்குவன ஆகமங்களாகிய சித்தாந்த சாத்திரங்களேயாமென்றுந் தாயுமானசுவாமிகள், குமாரகுருபரசுவாமிகள் முதலிய மகான்களெல்லாந் தாங்களருளிச்செய்த நூல்கள்வாயிலாக மிக முழங்கிக் கூறியிருக்கவும், உபாத்தியாயரவர்கள் மாத்திரம் சிவப்பேற்றை மலைவறவிளக்குவனவாய்ச், சித்தாந்தமாயமைந்துள்ள அந்நூல்களையும், அவற்றையே பிரமாணமாகக் கொண்டொழுகுகின்ற என்போலியரையுந் தூஷித்து, அபக்குவராகவுள்ளார்பொருட்டு அர்த்தவாதமாய்ச் சரித்திர ரூபமாகவெழுந்த புராணங்களையே பிரமாணமாகக்கொண்டு, அப்புராணங்களின் பெருமையைப் பேதைப்பெண்கள் வாயிலாகவே காட்டுவான்புகுந்து, 'சுப்பிரமணியப்பெருமானது பாத்துவத்தை இக்காலத்து யாழ்ப்பாணத்துள்ள பெண்பாலாரும் மறுத்துக்கூறார்களே' என்று, (சாறமிழ்ந்து கோதுண்ணும் பேறுடைவிலங்கொப்பத்) தம்மனம்போனவாறேயெழுதிநிரப்பி, ('அல்வாவிலவண்மகிழுக' என்ற நியாயத்தானே) தம்மின் மகிழ்ந்துகொள்கின்றார்கள். அஃதன்றி நல்லூர்க்கந்தசுவாமிகோயிலிலே வரக்கிடக்கின்ற நோயாளர்க்கும் பெண்களுக்கும் சுப்பிரமணியபாத்துவம் விளக்கவிடக்கின்றதென்றுங்கூறுகின்றார்களே. 'வேதக்காட்சிக்கு முபநிடத்துச்சியில்விரித்த-போதக்காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்' என்றும், 'ஞானந்தானுருவாகிய நாயகனியல்பை —யானுமீயுமாயிசைத்துமென்றாலிலகளிதோ—மோனந்தீர்கலாமுனிவருந்தேற்றிலர்முழுதுந்— தானுங்காண்கிலனின்னமுந்தன்பெருந்தலைமை' என்றும் 'தத்தமாற்றங்கணிறுவியசமயிகள்பலருங்-கத்துபுன்சொலை விண்விநாவிடுஞ் செயல்காணார்-சுத்தவாதுளமுதலியதந்திரத்தொகுதி-புத்துணர்ந்திடுகிரரேயொருசிறிதுணர்வார்' என்றும், இன்னும்பலவாறுவ வேதசிரத்திலும், வேதாந்தஞானத்திலும் சுப்பிரமணியபரத்துவத்தையறிய முடியாதென்றும், ஆகமங்களாகிய சித்தாந்தசாத்திரங்களையறிந்தவர்களே அப்பரத்துவத்தைக்குறித்துச் சிறிதேயறிய வல்லுநரென்றுங் கந்தபுராணமே விதந்தெடுத்துவலியுறுத்திக் கூறியதேயாகவும், நோயாளர்க்கும் பேதைப்பெண்களுக்கும் அப்பரத்துவம் விளங்கக்கிடக்கின்றதென்று அதனை அத்துணையாகச் சிறுமைப்படுத்தத் துணிதல் வெகு விந்தையாகவிருக்கின்றதே. (அது, கடவுள் ஞானிகளுக்கொளித்துச் சிறுகுழந்தைகளுக்குத் தம்மை வெளிப்படுத்தியிருக்கின்றாரென்றுகூறும், கிறிஸ்தவர்கூற்றுக்குமினமாக இருக்கின்றதே. இங்ஙனமேம்பாகத் துணிந்து கூறும் உபாத்தியாயரவர்கள் அந்நோயாளர்களையும்பெண்களையுமே இலக்காகக்கொண்டு, அவர்களோடு பேசுதலையொழித்துத், தமது நிலைக்கிணங்காத என்னை விளித்து வலிந்து வாதுக்கிழுக்கவேண்டிய ஆவசியகமென்னையோ? 'ஆயிரந்தான்சொன்னாலு மறியாதவஞ்சநெஞ்சப் — பேயரோடுகூடிற்பிழையாம் பராபரமே' என்னும்மேலோர்வாக்கும் இங்கே சிந்திக்கற்பாலதேயாம். புராணங்களை மாத்திரமே பிரமாணமாகக்கொண்டொழுகும் உபாத்தியாயரவர்கள், இம்மைப்பயனைக்கருதி வாங்கிடத்தன் முதலியவற்றையே பெரிதாகக்கொண்டு பாராட்டல் சித்தாந்தநூல் வழக்குக்கு முழுமாறென்பதனை யறியாதிருத்தல் நூதனமன்றே. 'இம்மைப்பயனைக்கருதாதே இறைவன் திருவாலயமதனிற் -செம்மைசிறக்கமா பூசை செய்விப்பவரேசிறப்புடையர் - இம்மைப்பயனைக்குறித்தியற்று மதிகாரியர்காயுடலெடுப்பர்' என்னுஞ் சிவதருமோத்தரச் செய்யுளுமிங்கே சிந்திக்கற்பாலதொன்றேயாம்.)

பன்றிக்குட்டிகளுக்கிரங்கித், தாய்ப்பன்றிவடிவங்கொண்டு வந்த சொக்கலிங்கப்பெருமானதுவடிவத்தைத், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்க்கு உவமையாகக் கூறுதல் சிறிதும்பொருந்தாததொன்றென்க. அப்பன்றிவடிவம் அப்பெருமானாற்கொண்டு உடனே நீக்கப்பட்டதொன்றேயாம், அவ்வடிவம் அந்நாயனாரைப்போற் பிறந்துவளர்ந்துள்ள ஒரு வடிவமன்று. அவர் பிறக்கவில்லையென்று சொழித்தலபுராணங்கூறுகின்றதேயென்னில், பிறந்தாரென்று மேலாகிய பெரியபுராணங்கூறுகின்றதே. மேலும் பௌஷ்கரபுராணத்திலுங் கார்த்திகேயத்திலுங் கூறப்பட்டிருப்பின், அவற்றைமறைபெடுத்து அறுவதித்துக் காட்டாமை

